## கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்

ம.சா. 1 நாள் 01.08.2025

வழக்கு எண் **MCOP No. 42/2022**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லெட்சுமணன் | ஊர் | : | மதுரை |
| தகப்பனார் பெயர் | : | ஐயல்ராஜ் | தாலுகா | : | மதுரை |
| தொழில் | : | TNS company | வயது | : | 55/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ஆம் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.அவற்றை மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்களாக அங்கீகரித்து கொள்ள வேண்டி பிராத்திக்கிறேன்.

1. 31.10.2021 ஆம் தேதியிட்டு தேவதானப்பட்டி காவல் நிலைய குற்ற எண் 611/2021 U/s 304(A) இ.த.சா வின் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் இணையதள நகல் ம.சா..ஆ., 1

2. 09.11.2021 ஆம் தேதியிட்டு எனது தகப்பனார் ஐயல் ராஜ் என்பவர் இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்றிதழின் இணையதள நகல் ம.சாஆ 2

3. ஐயல் ராஜ் பெயரில் உள்ள விபத்து பதிவேடு xerox நகல் ம.சா.ஆ. 3

4. TN 60 T 4605 என்ற வாகனத்திற்கு உரிய பதிவு சான்றிதழின் xerox நகல் ம.சா.ஆ.4

5. TN 60 T 4605 என்ற வாகனத்திற்கு உரிய காப்பீடு xerox நகல் ம.சா.ஆ.5

6. இறந்து போன ஐயல்ராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் இணையதள நகல் ம.சா.ஆ.6

7. ஜெயலட்சுமி என்பவர் 27.03.2022 ஆம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழின் xerox நகல் ம.சா.ஆ.7

8. சாந்தா என்பவர் 27.04.2022 ஆம் தேதி இறந்ததை காட்டக்கூடிய இறப்புச் சான்றிதழின் xerox நகல் ம.சா.ஆ.8

9. மனுதாரர்களின் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் xerox நகல்கள் 3 எண்ணம் ம.சா.ஆ.9

10. மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டைகளின் xerox நகல்கள் ம.சா.ஆ. 10

11. 31.10.2021 ஆம் தேதியிட்டு தேனி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து எனது தகப்பனார் பெயருக்கு வழங்கப்பட்ட mortuary slip xerox நகல் அத்துடன் விபத்து பதிவேடு xerox நகல் இணைக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.11

மனுப்படி உத்தரவாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**1 முதல் 3 எதிர் மனுதாரர்கள் தரப்பில்  குறுக்கு விசாரணை:–**

(1 முதல் 3 எதிர் மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது).

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR
Digitally signed by SANKAR
Date: 2025.08.01 17:25:01 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**